VLAMBARAM 01 JUL 2010



# குரு என்பவர் உயிருள்ள வரைபடம்

**"நீங்கள் உலகில் வாழ வேண்டுமேயானால் உங்களுக்கு நம்பிக்கை வேண்டும். இப்போது விழிப்புணர்வில்லாத நம்பிக்கையை வளர்த்துக் கொண்டிருக்கிறீர்கள்."**

நீங்கள் கேதார்நாத்திற்குப் போக விரும்புகிறீர்கள் என்று வைத்துக் கொள்வோம். யாரோ வாகனத்தை ஓட்டிச் செல்கிறார்கள். சாலைகள் போடப்பட்டிருக்கின்றன. நீங்கள் தனியாக வந்திருந்து, சரியான வழிகாட்டுதல் இல்லாத பட்சத்தில் என்னிடம் ஒரு வரைபடம் இருந்திருந்தால் நன்றாக இருந்திருக்குமே என்று யோசித்திருப்பீர்கள். ஒருவகையில் பார்த்தால், குரு என்பவர் ஒரு வரைபடம் தான். உயிருள்ள வரைபடம். இந்த வரைபடத்தை உங்களால் வாசிக்கத் தெரிந்தால் உங்களுக்கு வழி தெரியும். நீங்கள் பயணம் போகலாம். உங்கள் குரு உங்கள் வாகன ஓட்டுநர் போலவும் இருக்கலாம். நீங்கள் ஏறி அமர்ந்து ஒரு தூக்கம் போட்டால் அவர் உங்களை கேதார்நாத்தில் போய் இறக்கிவிடுவார். ஆனால் அந்தப் பயணத்தின் போது தூங்குவதற்கோ, மகிழ்ச்சியாக அந்தப் பயணத்தை செய்வதற்கோ, பேருந்து ஓட்டுநர் மேல் உங்களுக்கு நம்பிக்கை இருக்க வேண்டும். ஒவ்வொரு சாலை வளவுகளிலும் 'இந்த மனிதர் என்னைக் கொன்று விடுவாரா? எங்கேயாவது போய் மோதிவிடுவாரா? என்னைக் கொல்ல வேண்டும் என்ற நோக்கம் இவருக்கு இருக்கிறதா?' என்ற கேள்விகள் எல்லாம் உங்களுக்கு வந்து கொண்டேயிருந்தால் உங்களுக்கு பைத்தியம் தான் பிடிக்கும். நாம் நம்பிக்கையைப் பற்றி ஏன் பேசுகிறோம் என்றால் ஒரு குருவுக்கு உங்கள் நம்பிக்கை வேண்டுமென்று இல்லை. நம்பிக்கையில்லையென்றால் உங்களை நீங்களே பைத்தியமாக்கிக் கொள்வீர்கள். இது ஆன்மீகப் பயணத்திற்கு மட்டுமல்ல. இந்த உலகத்தில் வாழ்வதற்கே உங்களுக்கு நம்பிக்கை வேண்டும். இப்போது விழிப்புணர்வு இல்லாத நிலையில் உங்கள் நம்பிக்கை செயல்படுகிறது. நீங்கள் ஒரு பேருந்தில் அமர்ந்திருக்கிறீர்கள். அது வேறு ஒன்றுமில்லை. வெவ்வேறு உலகங்கள், உலோகங்கள் மற்றும் முழுக்குகிற பொருட்களின் தொகுப்புதான். விழிப்புணர்வில்லாமலே இந்த வாகனத்தை நீங்கள் நம்புகிறீர்கள். நட்டுக்களும், போல்ட்டுகளும், வயர்களும் மட்டுமே இருக்கிற இந்த கூட்டமைப்பை இவ்வளவு நம்புகிறீர்கள். விழிப்புணர்வு இல்லாமலே நீங்கள் நம்புகிறீர்கள். இதே நம்பிக்கை, விழிப்புணர்வோடு எழுமென்றால் பல அதிசயங்கள் நிகழ்வதைப் நீங்கள் பார்ப்பீர்கள். நம்பிக்கை என்றால் வாழ்வின் புதிய விஷயங்கள் எதையும் நான் சொல்லவில்லை. ஒவ்வொரு விநாடியும் மூச்சுக் காற்றை உள்ளிழுக்கவும், வெளிவிடவும் உங்களுக்கு நம்பிக்கை தேவைப்படுகிறது. உங்கள் நம்பிக்கை விழிப்புணர்வு இல்லாத நிலையில் இருக்கிறது. உங்கள் நம்பிக்கையில் மேலும் கொஞ்சம் விழிப்புணர்வைக் கொண்டுவருமாறு கேட்கிறேன். வாழ்க்கை என்பதே நம்பிக்கைதான். அது இல்லாத பட்சத்தில் நீங்கள் யாரும் இருக்க இயலாது. எனவே, உங்கள் வரைபடத்தை நீங்களே வரைந்து கொண்டு, உங்கள் பேருந்தை நீங்களே ஓட்டிச் கொண்டு போக முடியுமென்றால் அது மிகவும் நல்லது. ஆனால் முன்பின் தெரி யாத பாதையில் ஒரு வரைபடம் இல்லாமல் போவீர்களேயானால், சென்றடைய வேண்டிய இடத்திற்குச் செல்ல பல பிறவிகள் தேவைப்படும். கையில் ஒரு வரைபடமிருந்தால் அதை எளிதில் நீங்கள் கடந்து போவீர்கள்.



## சத்குரு வாசுதேவ்

ஒரு நல்ல வாகன ஓட்டுநருடன் நீங்கள் போனால் மிக விரைவாகப் போவீர்கள். இதுதான் வித்தியாசம். நீங்களாகப் போக முடியாது என்றில்லை. அதற்கு எவ்வளவு காலம் ஆகுமென்று உங்களுக்குத் தெரியாது. அதுதான் வித்தியாசம்.


## Inner Engineering Program

Date: **August 11th to 17th**

Location: **Toronto Botanical Garden,**
777 Lawrence Avenue East ,
(Lawrence & Leslie intersection), Toronto, ON M3C 1P2 - Canada

Free Introductory talk on August 11th at 6:30pm to 7:30pm
ALL ARE WELCOME

Session Info: **Morning Session : 9:30 am to 12:30 pm** OR
**Evening Session: 6:30 pm to 9:30 pm**

Website: www.ishafoundation.org / www.ishayoga.org

Email: toronto@ishafoundation.org Phone: 1-866-424 - ISHA (4742)